சுருக்கம்

பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005 – Covid-19 - தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் (ப.பா.சி.) சார்பில் 44–வது சென்னை புத்தகக் கண்காட்சி பிப்ரவரி – 2021–இல் நடத்த நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.4)த்துறை

அரசாணை (நிலை) எண். 57

நாள்: **22.1.2021**

சார்வரி, தை 9
திருவள்ளுவர் ஆண்டு – 2051

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.820, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.4)த்துறை, நாள் 31.12.2020
2. பொது நூலக இயக்குநரின் கடிதம் எண்.7699/எ1/2020, நாள் 07.01.2021

•••••••

**ஆணை:**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட பொது நூலக இயக்குநரின் கடிதத்தில், தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் நோய்த்தொற்றை தடுப்பதற்காக, மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி 25.03.2020 முதல் தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் ஊரடங்கு உத்தரவு பல்வேறு தளர்வுகளுடன் அமலில் இருந்து வருகிறது எனவும், தமிழ்நாடு அரசின் சிறப்பான செயல் பாட்டினாலும், பொதுமக்களின் ஒத்துழைப்பினாலும் தற்போது நோய்த் தொற்று பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட போதிலும், வெளிநாடுகளில் உருமாறிய வைரஸின் தாக்கம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, கொரோனா வைரஸ் நோய்த்தொற்றை தடுப்பதற்காக தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005–இன் கீழ் 31.12.2020 முடிய பிறப்பிக்கப்பட்ட பொது ஊரடங்கு உத்தரவு, ஏற்கனவே நடைமுறையில் உள்ள பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் தளர்வுகளுடன் 31.01.2021 முடிய நீட்டிப்பு செய்து முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். மேலும்,தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்க கோரிக்கையினை ஏற்று, ஆண்டு தோறும் சென்னையில் நடத்தப்பட்டு வரும் புத்தகக் கண்காட்சியை வாசகர்கள் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி இந்த ஆண்டும் (2021) உரிய வழிகாட்டு நெறிமுறைகளுடனும் பாதுகாப்புடனும், உரிய கட்டுப்பாடுகளோடும் நடத்த அனுமதி வழங்கலாம் என தெரிவித்து, சென்னையில் 44வது புத்தக கண்காட்சியை நடத்த தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்திற்கு அனுமதி வழங்குமாறு பொது நூலக இயக்குநர் அரசை கோரியுள்ளார்.

2. பொது நூலக இயக்குநரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலித்த அரசு அதனை ஏற்று, தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் (ப.பா.சி.) சார்பில் 44–வது சென்னை புத்தக் கண்காட்சியை பிப்ரவரி – 2021–இல் இவ்வாணையின் இணைப்பில் உள்ள நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி நடத்த அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.சண்முகம்
அரசு தலைமைச் செயலாளர்.

**பெறுநர்**

முதன்மைச் செயலாளர், பள்ளிக்கல்வித் துறை, சென்னை–9.
கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை.
பொது நூலக இயக்குநர்(மு.கூ.பொ),சென்னை– 2.
தலைமைச் செயலாளரின் மு.மு.நிலை தனிச் செயலாளர் , சென்னை 9

**நகல்**

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் மு.மு.நிலை தனிச் செயலாளர் , சென்னை 9
தென்னிந்திய புத்தக விற்பனையாளர்
மற்றும் பதிப்பாளர் சங்கம் (ப.பா.சி),
எண்.8, இரண்டாவதுமாடி, சன்பிளாசா,19, G.N.செட்டி சாலை,
சென்னை–6.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

22/1/2021
பிரிவு அலுவலர்

## இணைப்பு

**தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் (ப.பாசி.) சார்பில் 44–வது சென்னை புத்தக கண்காட்சியை பிப்ரவரி 2021–இல் நடத்த நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்.**

### I. பொதுவிதிமுறைகள்

1. 65 வயதிற்கு மேற்பட்டவர்கள், பல்வேறு நோய்வாய்ப்பட்டவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் கைக்குழந்தைகள் புத்தககண்காட்சிக்கு அனுமதித்தல்கூடாது.
2. Ticket counter-ல் கூட்ட நெருக்கடியை தவிர்க்கும் பொருட்டு online payments மூலம் நுழைவு கட்டணம் கொடுக்கலாம்.
3. புத்தகக் கண்காட்சியில் ஒவ்வொரு அரங்கிலும் (Stall) இரண்டு வாயில்கள் அமைக்கப்படவேண்டும். ஒரு வாயில் வழியாக வாசகர்கள் உள்ளே வருவதற்கும் மற்றொரு வாயில் வழியில் வெளியே செல்வதற்கும் ஏற்ற வகையில் அரங்கு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
4. ஒரு அரங்கத்தில் ஒரே நேரத்தில் 3 வாசகர்கள் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்பட வேண்டும். மேலும், ஒவ்வொரு அரங்கிலும் ஒவ்வொரு வாசகருக்கும் அதிகபட்சமாக 10–லிருந்து 15 நிமிடங்கள் வரை உரிய சமூக இடைவெளியுடன் புத்தகங்களை பார்வையிடவும், வாங்கவும் அனுமதிக்கலாம்.
5. புத்தக கண்காட்சி நடைபெறவிருக்கும் அனைத்து நாட்களிலும் கண்காட்சியினை காலை 10.00 மணி முதல் மாலை7.00 மணி வரைநடத்தஅனுமதிக்கலாம்.
6. நோய் தொற்று பரவுவதைத் தடுக்கும் பொருட்டு அரங்கினுள் குளிர்சாதன வசதி ஏற்படுத்தக்கூடாது.
7. அரங்கப்பணியாளர்கள் கட்டாயம் கையுறை (Gloves) அணிந்திருக்க வேண்டும்.

### II. சமூகஇடைவெளிவிதிமுறைகள்

1. கண்காட்சிக்கு வரும் வாசகர்கள் கைகளை சோப் அல்லது ஆல்கஹால் கலந்த கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்த பின்பே உள்ளேவர அனுமதிக்க வேண்டும். அதற்கு ஏதுவாக நுழைவு வாயிலில் வாசகர்கள் கைகளை சுத்தம் செய்திட சோப் மற்றும் தண்ணீர் அல்லது கிருமி நாசினி திரவம் வைத்திருக்க வேண்டும்.
2. ஒவ்வொரு அரங்கிலும் கிருமி நாசினி வாசகர்களின் உபயோகத்திற்காக கட்டாயம் வைத்திருத்தல் வேண்டும்.
3. ஒவ்வொரு அரங்கும் போதிய இடைவெளி விட்டு அமைந்திருக்க வேண்டும்.

### III. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

1. கண்காட்சிக்கு வரும் வாசகர்கள், குறைந்தது 6 அடி இடை வெளியுடன், தனி மனித இடைவெளியினை கடைப்பிடித்து, வரிசையில் நின்று ஒவ்வொருவராக உள்ளே வருவதற்கு ஏதுவாக நுழைவு வாசலின் தரையில் உரிய இடை வெளியில் வட்ட குறியிட வேண்டும்.

2. புத்தக கண்காட்சி நடைபெறும் இடம் மற்றும் அதில் உள்ள கழிவறைகளையும் உரியகால இடை வேளைகளில் சுத்தப்படுத்துதல் வேண்டும். இப்பகுதிகளில் சமூக இடைவெளிவிதிகள் கட்டாயம் கடைப் பிடிக்கப்படவேண்டும்.
3. கண்காட்சிக்கு வரும் வாசகர்கள் பார்வையில் படும் வகையில் Covid-19-ஐ கட்டுப்படுத்த அரசு அறிவித்துள்ள அறிவுரைகள் / பாதுகாப்பு நெறிமுறைகள் குறித்த விவரங்கள் வைத்திருக்க வேண்டும்.
4. Covid–19 தொற்று நோய் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு ஏதுவாக பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் சுகாதார துறைக்காக ஒரு அரங்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.
5. ஒவ்வொரு அரங்கிலும் Sanitizer இருக்க வேண்டும். வாசகர்கள் கைகளைSanitizer மூலம் கழுவிய பின் அரங்கினுள் அனுமதிக்க வேண்டும்.
6. கூடியவரையில் வாசகர்கள் கையுறை அணிந்து வர பரிந்துரைக்கலாம்.
7. வாசகர்களுக்கு குடிநீர் வசதி, கழிப்பிடவசதி போன்றவை ஏற்படுத்தித்தர வேண்டும்
8. ஒவ்வொரு ஆண்டும் புத்தக கண்காட்சி நடைபெறும்போது மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு வசதிகளை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.
9. COVID–19 பெரும் தொற்று தொடர்பான விழிப்புணர்வை வாசகர்களிடம் ஏற்படுத்தும் பொருட்டு அரங்கில் ஒலி பெருக்கி மூலம் ஒலிக்கச் செய்ய வேண்டும்.
10. அரங்கினுள் ஒரே இடத்தில் அதிககூட்டம் கூடுவதை கட்டாயம் தவிர்க்க வேண்டும்.
11. நாள் தோறும் கண்காட்சி தொடங்கும் முன்பும் முடிவடைந்த பின்பும் அரங்கத்தை ஆல்கஹால் கலந்த கிருமி நாசினி கொண்டு தூய்மை படுத்த வேண்டும்.

**IV.<u>வெப்பநிலை பரிசோதனை</u>**

கண்காட்சிக்கு வரும் வாசகர்கள், அரங்கப் பணியாளர்கள் உட்பட அனைவரையும் வெப்பமானி (Thermal Scanner) மற்றும் பல்ஸ் ஆக்ஸிமீட்டர் (Pluse Oximeter) கொண்டு சோதித்த பின்பே அரங்கினுள் அனுமதிக்க வேண்டும்.

**V. <u>தொற்றுநோய் தடுப்பதற்கான சமூக நடத்தை/பொது இடங்களில் கட்டுப்பாடு கடைபிடித்தல்</u>**

1. கண்காட்சிக்கு வரும் வாசகர்கள் கட்டாயம் முகக் கவசம் அணிந்திருப்பதை உறுதி செய்த பின்பே அனுமதிக்க வேண்டும்.
2. அரங்கின் உள்ளேயும் மற்றும் வெளிபுறமும் குப்பைகளை கொட்டுதல் மற்றும் எச்சில்துப்புதல் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.
3. உணவு வகைகள், குளிர்பானங்கள் ஆகியவை அரங்கினுள் அனுமதித்தல் கூடாது.

**VI. <u>இதரவழிமுறைகள்</u>**

மேற்காணும் நெறிமுறைகளைக் கண்காணிக்க தேவைப்படும் இடங்களில் போதுமான CCTV Cameras பொருத்தப்பட வேண்டும்.

**க.சண்முகம்**
**அரசு தலைமைச் செயலாளர்.**

/உண்மை நகல்/

ஒப்பம் 27/1/2021

பிரிவு அலுவலர்.